செ.வெ.எண்: 22/2021 நாள்: 16.11.2021

## பத்திரிகை செய்தி

தென்காசி மாவட்டத்தில் உள்ள 18 பேரூராட்சிகளிலும் அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தில் (பயனாளியே வீடு கட்டிக் கொள்ளும் திட்டம் (Beneficiary Led Construction)) வீடுகள் கட்டுவதற்கு தகுதியான பயனாளிகளிடமிருந்து உரிய ஆவணங்களுடன் விண்ணப்பங்கள் பெறுவதற்கு 17.11.2021 அன்று புதன்கிழமை மு.ப.10.00 மணி முதல் பி.ப.6.00 மணி வரை சிறப்பு முகாம்கள் சம்மந்தப்பட்ட பேரூராட்சி அலுவலகங்களில் வைத்து நடைபெறவுள்ளது.

எனவே புதிய வீடு கட்ட விரும்பும் பயனாளிகள் அவர்கள் வசிக்கும் பகுதியில் உள்ள பேரூராட்சி அலுவலகத்தில் நில உடைமை ஆவணங்களான பத்திரம் / பட்டா / சிட்டா, குடும்ப அடையாள அட்டை, ஆதார் அட்டை, வங்கி கணக்கு புத்தகம் ஆகியவற்றின் நகல்களுடன் புகைப்படம் ஒட்டப்பட்ட விண்ணப்பத்தை சமர்ப்பித்து பயன்பெறுமாறு தெரிவிக்கப்படுகிறது.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அவலுவலகம், தென்காசி.**